## தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை, மதுரை மாவட்டம்.

### பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வாணையம் மூலம் 2023-ம் ஆண்டு தேர்வு செய்யப்பட்ட 636 பணியாளர்களை தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைக்கு தேர்வு செய்யப்பட்டது. தேர்வு செய்யப்பட்ட 636 புதிய தீயணைப்போர்களுக்கான அடிப்படை பயிற்சியானது தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை இயக்குநர் அவர்களின் உத்தரவுப்படி மாநில பயிற்சி மையம்-தாம்பரம், சென்னை-செங்குன்றம், மதுரை, திருநெல்வேலி, இராணிப்பேட்டை மற்றும் கரூர் ஆகிய 6 இடங்களில் தற்காலிக பயிற்சி மையம் துவங்கப்பட்டு 02.04.2024 முதல் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

மதுரை மாவட்டம், கிடாரிபட்டியில் அமைந்துள்ள லதா மாதவன் பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் தற்காலிகமாக தீயணைப்போர் பயிற்சி பள்ளி 01.04.2025 அன்று துவங்கப்பட்டு மூன்று மாதங்கள் 100 தீயணைப்போர்களுக்கான அடிப்படை பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சியின் போது தீயணைப்போர்கள் தீ மற்றும் விபத்து காலங்களில் எவ்வாறு செயல்படுவது, தீயணைக்கும் முறைகள், உயிர்மீட்பு பணிகள் குறித்த பயிற்சிகள், நீச்சல் பயிற்சிகள், முதலுதவி பயிற்சி உள்ளிட்ட துறை சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சியின் துவக்க விழாவினை 02.04.2025 அன்று தென்மண்டல துணை இயக்குநர் திரு.க.ராஜேஷ்கண்ணன் குத்துவிளக்கு ஏற்றி துவக்கினார்கள். இவ்விழாவில் மதுரை மாவட்ட அலுவலர் திரு.த.வெங்கட்ரமணன் வரவேற்புரை ஆற்றினார். உடன் விருதுநகர், தேனி மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் மாவட்ட அலுவலர்கள் பயிற்சி குறித்த அறிவுரைகள் வழங்கினார்கள். மேலும் மதுரை மாவட்ட உதவி மாவட்ட அலுவலர்கள், நிலைய அலுவலர்கள் மற்றும் பயிற்சி வழங்கும் பயிற்றுநர்கள் கலந்து கொண்டனர். மூன்று மாத கால அடிப்படை பயிற்சிக்குப்பின் பயிற்சி பெற்ற தீயணைப்பு வீரர்கள் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையங்களில் பணியமர்த்தப்பட உள்ளனர்.

மாவட்ட அலுவலர்,
தீயணைப்பு-மீட்புப்பணிகள் துறை,
மதுரை மாவட்டம், மதுரை.